உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 14.07.2026 • மலர் 04 • இதழ்: 195 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 14.07.2026 • Vol : 04 • Issue : 195 • Page : 4 • Rs. 5/-

## அயோத்தி ராமர் கோவிலுக்கு

# தலைமை செயல் அதிகாரியை நியமனம் செய்ய முடிவு

லக்னோ, ஜூலை 14

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தில் உலகப் புகழ்பெற்ற இந்து மதக் கடவுள் ராமர் கோவில் உள்ளது. அயோத்தி ராமர் கோவிலை ராம ஜென்ம பூமி அறக்கட்டளை நிர்வகித்து வருகிறது.

இதனிடையே, அயோத்தி ராமர் கோவிலுக்கு தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து கடவுள் ராமரை தரிசனம் செய்து வருகின்றனர். மேலும், கோவிலுக்கு நன்கொடையாகவும், காணிக்கையாகவும் தினமும் லட்சக்கணக்கான ரூபாய், தங்கம், வெள்ளி நகைகளை பக்தர்கள் வழங்குகின்றன. இந்த நன்கொடை, காணிக்கை மற்றும் வரவு, செலவை ராம ஜென்ம பூமி அறக்கட்டளை நிர்வகித்து வருகிறது.

இதனிடையே, ராமர் கோவிலுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கை பணத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளது. கோவிலில் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டவர்கள்காணிக்கை, நன்கொடை பணத்தை திருடியுள்ளனர். முதற்கட்ட விசாரணையில் 3 கோடி ரூபாய் வரை காணிக்கை பணத்தில் திருடப்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.



இந்த திருட்டு முறைகேட்டில் ஈடுபட்டதாக 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் நாடு முழுவதும் பூதாகாரமான நிலையில் இந்த முறைகேடு தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு விசாரணையும் நடைபெற்று வருகிறது.

இந் நிலையில், காணிக்கை முறைகேடு புகார்தீவிரமடைந்துள்ள நிலையில் ராமர் கோவிலை நிர்வகிக்கும் ராம ஜென்ம பூமி அறக்கட்டளைநிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அயோத்தி ராமர் கோவிலுக்கு தலைமை செயல் அதிகாரியை (சிஇஓ) நியமனம் செய்ய கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இந்த பணிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும், விண்ணப்பிக்க 18ம் தேதி கடைசி நாள் என்றும் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட உள்ள அயோத்தி ராமர் கோவில் தலைமை செயல் அதிகாரியின் முதன்மை பணியாக, அறக்கட்டளை மீதான பக்தர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் பணி உள்ளது என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## குமரி மாவட்ட காவல்துறை, பொதுமக்கள் நல்லுறவு கிரிக்கெட் போட்டி: எஸ் பி பரிசுகள் வழங்கினார்




நாகர்கோவில், ஜூலை. 14

குமரி மாவட்ட காவல்துறை மற்றும் பொதுமக்கள் நல்லறவு கிரிக்கெட் போட்டி நாகர்கோவில் கோணம் அரசு தொழில்நுட்பக்கல்லூரிமைதானத்தில் கடந்த 1ம் தேதி தொடங்கி நடந்தது. குமரிமாவட்டத்தில்இருந்துமொத்தம் 26 அணிகள் கலந்து கொண்டு விளையாடின. நேற்று முன்தினம் இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது. வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்ட போலீஸ் எஸ் பி, ஸ்டாலின்பரிசு வழங்கினார். முதல் பரிசு பெற்ற அணிக்கு ரூ. 50,000 மற்றும் கோப்பையும், 2ம் பரிசு பெற்ற அணிக்கு ரூ.30,000 மற்றும் கோப்பையும், 3ம் பரிசு பெற்ற அணிக்குரூ15ஆயிரமும்கோப்பையும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் எஸ்பி ஸ்டாலின் பேசுகையில்: குமரி மாவட்ட காவல்துறை மற்றும் பொது மக்கள் இணைந்துமுதலில்கைப்பந்துதொடர் நடத்தியதில் அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அதனை தொடர்ந்து தற்பொழுது கிரிக்கெட் தொடர் நடத்தியுள்ளோம். காவல்துறை என்பது வெறும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது மட்டும் காவல்துறை பணி அல்ல. அதையும் தாண்டி பொதுமக்களுக்கான நல் வழிகாட்டியாகவும் காவல்துறை விளங்கி வருகிறது. குமரி மாவட்டத்தில் காவல்துறையினர் கடுமையாக நடந்துகொள்கிறார்என்று எண்ணம் பொது மக்களுக்கு உள்ளது. அதை மாற்ற வேண்டும். போதை இல்லாத, விபத்து இல்லாத மாவட்டமாக குமரி மாவட்டத்தை மாற்ற இளைஞர்களின் பங்கு மிகவும் அவசியம்.இளைஞர்களின்பங்களிப்பு இருந்தால் நிச்சயம் புதிய இலக்கை அடையமுடியும். எனஅவர்பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கோணம் தொழில்நுட்பக் கல்லூரி உடற்கல்வி இயக்குனர்முனைவர்சுப்ரதீபன், குமரி மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் ஹரிஹரசுப்பிரமணியன், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் அருண் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., ஆகியோர் மதுரை மாவட்டம்,கொட்டாம்பட்டி அருகே அரசுப் பேருந்தும், தனியார் ஆம்னி பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் காயமடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## புகார் அளிப்பதற்கு கட்டணமில்லா தொலைபேசி எண் அறிவிக்க தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை



ஈரோடு ஜூலை 14

ஈரோடு மாவட்டத்தைதலைமையிடமாகக்கொண்டு செயல்படும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர் ம.விஜய பாலாஜியை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை வழங்கியுள்ளது.

அந்தக் கோரிக்கை மனுவில், தமிழகத்தில் அழிவின் விளிம்பில் இருக்கும் விசைத்தறி தொழிலையும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்கும் வகையில், 2027ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேஷ்டி, சேலை உற்பத்திக்குஅரசாணைவெளியிட்டு,முதற்கட்டமாக ரூ.300 கோடியை விடுக்க வழிவகை செய்த தமிழக அரசுக்கும், கைத்தறி துறை அமைச்சருக்கும் நெசவாளர்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட வேஷ்டி, சேலைகளை இந்த ஆண்டு துவக்க இருப்பாக எடுத்துக் கொள்ளாமல், எதிர்வரும் தீபாவளி பண்டிகையின் போது முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்திருப்பது நெசவாளர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்றாலும், இதுவரை நடைமுறையில் இருந்த அளவான 1.77 லட்சம் வேஷ்டி, சேலைகள் மட்டுமே உற்பத்தி செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. காலச் சூழல் குறைவாக உள்ளநிலையைக்கருத்தில்கொள்ளாமல், அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் வேஷ்டி, சேலை வழங்கிட வழிவகை செய்து, விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து ஆறு மாத கால வேலைவாய்ப்பு கிடைக்க அரசு ஆவண செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அதுமட்டுமின்றி, இதுவரைபொங்கல்பண்டிகைக்கு வழங்கப்பட்ட வேஷ்டியின் அளவு 3.75 மீட்டராக இருந்த நிலையில், இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்படும் வேஷ்டியின் அளவு 2 மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 2 மீட்டருக்கு ஒரு முறை குறி கட்ட வேண்டிய சூழல் ஏற்படுவதால் உற்பத்தி குறையும் என்பதால், இன்றைய செலவினங்களுக்குத் தகுந்தவாறு ஒரு வேஷ்டி உற்பத்திக்குகுறைந்தபட்சம்ரூ.20கூலியாகநிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்றும், அரசு வழங்கும் இந்தக் கூலி விசைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாகச் சென்றடைகிறதா என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளனர். கூலி குறைவாகப் பெறுபவர்கள் உடனடியாகப் புகார் அளிக்கும் வகையில் கட்டணமில்லா தொலைபேசி எண் (TollFree Number) வசதியை அரசு அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர். எனவே, வேஷ்டி உற்பத்திக்கான கூலி உயர்வு குறித்த அறிவிப்பும், வேஷ்டிசேலை உற்பத்திக்காகத் தமிழ்நாடு அரசு வழங்கும் கூலியைக் குறைவாகப் பெறுபவர்கள் கைத்தறித்துறை நிர்வாகத்திற்குப் புகார் அளிக்கக் கட்டணமில்லா தொலைபேசி எண் குறித்த அறிவிப்பும் விரைவில் வெளிவருமா என்ற எதிர்பார்ப்பில், முழு உற்பத்தியும் முழு கூலியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு காத்துக் கொண்டிருக்கிறது.

## நாகர்கோவில் 30 நாட்கள் போக்குவரத்து மாற்றம் போக்குவரத்து காவல் துறை அறிவிப்பு

நாகர்கோவில் ஜூலை 14

நாகர்கோவில் போக்குவரத்து துறை போலீஸ் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகரில் ஒழுகினசேரி ரயில்வே மேம்பால பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. ரயில்வே மேம்பாலம் மற்றும் சாலை இணைக்கும் பணி நடைபெற இருப்பதால் வடசேரி, ஒழுகினசேரி சந்திப்பு வழியாக திருநெல்வேலி சாலை மார்க்கமாக செல்லும் வாகனங்களும், திருநெல்வேலியில் இருந்து ஒழுகினசேரி சந்திப்பு வழியாக வடசேரி செல்லும் வாகனங்களும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் திருநெல்வேலியில் இருந்து ஒழிகினசேரி சந்திப்பு வழியாக வடசேரி செல்லும் அனைத்து வாகனங்களும் அப்டா மார்க்கெட், புத்தேரி எஸ் எம் ஆர் வி பள்ளி வழியாக வடசேரி செல்ல வேண்டும். தக்கலை, மார்த்தாண்டம் மற்றும் திருவனந்தபுரம் செல்லும் அனைத்து வாகனங்களும் அப்டா மார்கெட், புத்தேரி, இறைச்சகுளம் மற்றும் களியங்காடு வழியாக செல்ல வேண்டும்.

வடசேரியில் இருந்து ஒழுகினாசேரி சந்திப்பு வழியாக திருநெல்வேலி வழித்தடத்தில் செல்லும் அனைத்து வாகனங்களும் வடசேரி, எஸ் எம் ஆர் வி பள்ளி, புத்தேரி, அப்டா மார்க்கெட் சந்திப்பு வழியாக செல்ல வேண்டும். திருவனந்தபுரம் மார்த்தாண்டம் மற்றும் தக்கலையிலிருந்து திருநெல்வேலிக்கு செல்லும் அனைத்து வானங்களும் களியன்காடு, இறைச்சகுளம், புத்தேரி, மார்க்கெட் சந்திப்பு வழியாக செல்ல வேண்டும்.

மேலும் மீனாட்சிபுரத்திலிருந்து அவ்வை சண்முகம் சாலை வழியாக திருநெல்வேலி செல்லும் அனைத்து இலகு ரக வாகனங்களும் ஒழுகினசேரி சந்திப்பு, புதிய ரயில்வே மேம்பாலம் வழியாக செல்ல வேண்டும்.

இந்த போக்குவரத்து மாற்றம் நேற்று 13ம் தேதி இரவு 11 மணி முதல் ரயில்வே மேம்பால சாலை இணைப்பு பணி முடியும் வரை 30 நாட்கள் அமலில் இருக்கும். மேற்படி மாற்றத்திற்கு பொதுமக்கள் அனைவரும், வாகன ஓட்டுனர்களும் ஒத்துழைப்புதரவேண்டும் என கோட்டாறு காவல் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு காவல் ஆய்வாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அழகப்பபுரம் பேரூராட்சியில் 1.96 லட்சம் பணிகளை தலைவர் தொடங்கி வைத்தார்



கன்னியாகுமரி, ஜூலை14,

அழகப்பபுரம் பேரூராட்சியில் வளர்ச்சி திட்ட பணிகளை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது அதன்படி நேற்று அழகப்பபுரம் பேரூராட்சி 15 வது வார்டில்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாடு திட்டம் மூலம் ஒரு கோடியே 96 லட்சத்தில் நவமணி சாலை மற்றும் வளன் நகர் சாலைகள் செப்பெனிடப்பட்டு நேற்று தார் சாலை பணிகளை அழகப்பாபுரம் பேரூராட்சிதலைவர்அனிற்றா ஆண்ட்ரூஸ் மணி தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் துணைத் தலைவர் ஆண்ட்ரூஸ்மணி, 15ஆவது வார்டுகவுன்சிலர் ஜார்ஜ் மலர்கொடி, பொறியாளர் மேற்பார்வையாளர் விஜயகுமார், ஒப்பந்தக்காரர் கைலாஷ் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி குறைகள் கேட்டறிந்தார்.

# திருவள்ளூர் மாவட்ட டிப்பர் லாரி உரிமையாளர்கள் சங்கம் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம்



திருவள்ளூர், ஜூலை 14

தமிழகத்தில் உள்ள கனிம வளங்களை வெளி மாநிலத்திற்கு கொண்டு செல்லவில்லை, ஆந்திர மாநிலத்தில் உள்ள கனிம வளங்களை தான் தமிழகத்திற்குள் கொண்டு வருகிறோம். டிப்பர் லாரிகளுக்கு மற்ற மாவட்டங்களுக்கு ஒரு சட்டம் திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒரு சட்டமா, என டிப்பர் லாரிகள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட டிப்பர் லாரி உரிமையாளர்கள்சங்கத்தின்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பட்டறை பெருமந்தூர் சத்யா பேட்டி.

திருவள்ளூர் மாவட்டம் திருப்பாச்சூர் அருகே திருவள்ளூர் மாவட்டத்தில் உடனடியாக தமிழக அரசு மணல் மற்றும் சவுடு மண் குவாரிகளை திறக்க வேண்டும், திருவள்ளூர் மாவட்டத்தில் அருகில் உள்ள ஆந்திர மாநிலத்தில் இருந்து உரிய அனுமதியுடன் இயங்கும் குவாரிகளில் இருந்து லாரிகளில் கொண்டு வரும் கனிம வளங்களை இடையூறு இல்லாமல் தமிழகத்தில் அனுமதிக்க வேண்டும், ஆந்திர மாநிலத்தில் இருந்து கொண்டுவரும் மலை மண் மூலம் திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் நடைபெறும் நெடுஞ்சாலை பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது இதை தடுக்கும் பட்சத்தில் நெடுஞ்சாலை பணிகள் பெரிதும் பாதிக்கப்படும் அதற்கு அனுமதி தரவேண்டும், திருவள்ளூர் மாவட்டத்தை தவிர பிற மாவட்டங்களில் இயல்பாக லாரிகள் இயக்குகின்றது அதேபோல் திருவள்ளூர் மாவட்டத்திலும் இயங்க அரசு ஆவணம் செய்ய வேண்டும்

இம்மாட்டத்தில் மட்டும் சுமார் 5,000 குடும்பங்களின் வாழ்வாதாரமாக டிப்பர்லாரி தொழில் நடைபெற்று வருகிறது தயவு செய்து அரசு இதனை கனிவுடன் பரிசளித்து அனுமதி வழங்கிட வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளை ஒரே இடத்தில் நிறுத்தி கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டம் திருவள்ளூர் மாவட்ட டிப்பர் லாரி உரிமையாளர் சங்கத்தின் மூலம் இன்று நடைபெற்ற வருகிறது இதில் 100க்கும் மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் கலந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளை நிறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் இந்நிலையில் லாரிகளுக்கு முன்பு நின்று ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பபப்பட்டது.



# வள்ளல் பொன் பாண்டித்துரை தேவர் அவர்களின் முழுமையான பெயரை மதுரை கரிமேடு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு சூட்ட வேண்டும்

### – மாவட்ட ஆட்சியரிடம் மனு

மதுரை ஜூலை 14

தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு, மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவி தமிழ் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பு செய்த வள்ளல் பொன் பாண்டித்துரை தேவர் அவர்களின் முழுமையான பெயர் மதுரை கரிமேடு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு சூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது.

தற்போது அந்தப் பள்ளிக்கு "வள்ளல் பொன் சேதுபதி பாண்டித்துரை" என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளதாகவும், அது வரலாற்று ரீதியாக முழுமையற்ற பெயராக இருப்பதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வள்ளல் அவர்களின் சரியான மற்றும் முழுமையான பெயர் "வள்ளல் பொன் பாண்டித்துரை தேவர்" என்பதால், தமிழுக்கும் தமிழ் மரபுக்கும் அவர் ஆற்றிய மகத்தான பணியை வருங்கால தலைமுறையினர் அறிந்து போற்றும் வகையில், தமிழக

அரசும் மதுரை மாநகராட்சி நிர்வாகமும் உடனடியாக பள்ளியின் பெயரை "வள்ளல் பொன் பாண்டித்துரை தேவர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி" என முழுமையாக மாற்றி அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு, அனைத்து கள்ளர் கூட்டமைப்பு, மூவேந்தர் முன்னணி கழகம் மற்றும் முக்குலத்தோர் வாழ்வுரிமைக் கட்சி ஆகிய அமைப்புகளின் சார்பில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனைத்து கள்ளர் கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஒ. வை. தியாகராஜன் தலைமையில், நாகராஜ், பூவை ஜெயக்குமார், எம்.சி. சேகர், ராமச்சந்திரன், நல்லபெருமாள், இளையராஜா பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அனைவருக்கும் காப்பீடு':

# காப்பீட்டு விழிப்புணர்வு காமிக்ஸ் புத்தகத் தொடர் வெளியீடு

சென்னை, ஜூலை 14

'அனைவருக்கும் காப்பீடு' என்ற தொலைநோக்கு இலக்கினை நோக்கி செல்வதற்கான விழிப்புணர்வு காமிக்ஸ் புத்தக தொடரை இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (IRDAI) தலைவர் அஜய் சேத் வெளியிட்டார். இந்தியா முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு ஆயுள் காப்பீட்டை மிகவும் எளிதாக அணுகக்கூடிய ஒன்றாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சியில் இன்ஷூரன்ஸ் துறையின் முன்னோடிகள் ஒன்றிணைந்துள்ளனர்.

அதில் ஐ.ஏ.சி.தலைவர் கமலேஷ் ராவ், எல்.ஐ.சி நிர்வாக இயக்குனர், துரைசாமி, பஞ்சாப் நேஷனல் வங்கி மெட்லைஃப் நிர்வாக இயக்குநரும் தலைமை செயல் அலுவலருமான சமீர் பன்சால், இந்தியா.ஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குனநரும் தலைமை செயல் அலுவலருமான ருஷப் காந்தி, உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தனித்துவமானகாப்பீட்டுஅம்சங்களைதொழில்நுட்ப விளக்கமாகக் எடுத்துக் கூறாமல் மக்கள் தங்களோடு தொடர்புபடுத்தி எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் கதைகள் மூலம் விளக்கப்படுகின்றன. காமிக்ஸை ஒரு ஊடகமாகப் பயன்படுத்துவதற்கு, அவை அனைத்து வயதுப் பிரிவினர் மற்றும் அனைத்து பகுதிகளுக்கும் எளிதாக சென்றடையும் என்பதே காரணமாகும். சுப்ரியா என்கிற ஒரு இளம் ஆயுள் காப்பீட்டு ஆலோசகரின் பயணத்தை மையமாகக் கொண்ட இந்த காமிக்ஸ் தொடர், நிஜ வாழ்க்கை சூழ்நிலைகளை "கதை வடிவ நினைவுகளாக கொண்டுவருகிறது; இதன் மூலம் தனிநபர்கள் ஏற்கனவே எடுத்த தீர்மானங்கள் எப்படி எதிர்காலத்தில் நிதி பாதுகாப்பை எவ்வாறு ஏற்படுத்தித் தருகின்றன என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த முன்முயற்சியானது, "அனைவருக்கும் காப்பீடு" என்ற பெரிய இலக்கை நோக்கிய ஒரு அர்த்தமுள்ள முன்முயற்சியைக் குறிக்கிறது

# தமிழ்நாடு விழா முன்னிட்டு பேச்சு கட்டுரை போட்டிகள்: கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில் ஜூலை 14

தமிழக அரசின் தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 15.07.2026 அன்று காலை 11.00 மணிக்கு நாகர்கோவில் புனித ஜோசப் கான்வென்ட் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற உள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட அளவில் 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 15.07.2026 ஆம் நாளன்று நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற உள்ளது. ஒரு போட்டிக்குஇரண்டுமாணவர்கள்கலந்துகொள்ளலாம்.

போட்டிக்கான தலைப்புகளாக, கட்டுரைப்போட்டிக்கு ' தமிழ்நாடு நாள் கருவானது முதல் உருவானது வரை' என்ற தலைப்பிலும், பேச்சுப் போட்டிக்காக

1. நான் விரும்பும் தமிழ்நாடு,
2. அன்றைய மெட்ராஸ் மாகாணம் இன்றைய நவீன தமிழ்நாடு,
3. இளைஞர்களின் தமிழ்நாடு,
4. கல்வியில் சிறந்த தமிழ்நாடு,
5. வீரம் செறிந்த தமிழ்நாடு என்ற தலைப்புகளிலும் நடக்கிறது.

கட்டுரைமற்றும்பேச்சுப்போட்டியில்வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசுத் தொகை ரூ.10,000/, 2ம் பரிசுத் தொகை ரூ.7,000/, 3ம் பரிசுத் தொகை ரூ.5,000/, என பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும். பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை (ம) பேச்சுப்போட்டிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 15.07.2026 ஆம் நாளன்று நாகர்கோவில் புனித ஜோசப் கான்வென்ட் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காலை 11.00 மணிக்கு நடைபெறும். போட்டியில் பங்கேற்கும் பள்ளி மாணவ மாணவிகள் தங்கள் பள்ளி தலைமையாசிரியரிடம் பரிந்துரை கடிதம் பெற்று போட்டி நடைபெறும் நாளன்று நேரில் அளித்தல் வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்புக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில்நேரிலோ,தொலைபேசிவாயிலாகவோ (தொலைபேசி எண் 04652 234508) தொடர்பு கொள்ளலாம்

போட்டிகளில் முதல்பரிசு பெறும் மாணவர்கள் சென்னையில் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்குபெறலாம். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சென்னையில் சூலை 18 அன்று நடைபெறும் தமிழ்நாடு நாள் விழாவில் பரிசுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பெறும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெறவேண்டுமெ‌ன கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கேட்டுக்கொண்டுள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், விஜயமங்கலம் அரசு ஆரம்பசுகாதாரநிலையம்வெளிநோயாளிகள்காத்திருக்கும் அறையினை திறந்து வைத்து பொதுமக்களிடம் பேசினார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா உட்பட பலர் உள்ளனர்.

# கரூர் கோவில் நிலங்களை பட்டா செய்ய பிறப்பித்த ஆணையை தடை விதிக்க கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் முறையீடு

### வழக்கை நாளை பட்டியலிட உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 14

சுமார் 25000 கோடி ரூபாய் மதிப்புள்ள கோவில் நிலத்தை பத்திரப்பதிவு செய்வதற்கான தடையை நீக்கி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஆணைக்கு தடை விதிக்க கோரி அந்த வழக்கை அவசர வழக்காக விசாரணைக்கு எடுக்க கோரி முறையீடு.

சேலத்தைச் சேர்ந்த திருத்தொண்டர்கள் அறக்கட்டளையின் அறங்காவலர் ராதாகிருஷ்ணன் உயர்நீதிமன்ற மதுரைகிளைகள் செய்த முறையீடு. கரூர் மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கல்யாண பசுபதீஸ்வரர் சுவாமி திருக்கோயில், ரவீஸ்வரர் சுவாமி திருக்கோயில், குப்புச்சிபாளையம் விக்ருதீஸ்வரர் திருக்கோயில் சொந்தமான பல கோடி மதிப்புள்ள நிலங்கள் 15 கிராமங்களில் உள்ளது இதில் 3390 தனி நபர்கள் பெயரில் பட்டா வழங்கபட்டு இந்து சமய அறநிலையத்துறை பத்திரப்பதிவிற்கு தடை செய்யப்பட்டது இதில் சுமார் 3085 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கம் செய்யலாம் அறிவிக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் கார்த்திகேயன் சக்தி வேலு அமர்வில் இதற்கு தடை விதிக்க வேண்டும் கோவில் நிலங்கள் இன்று பட்டாக்கள் செய்வதற்காக முகாந்திரம் உள்ளது எனவே இன்று இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என முறையீடு செய்தார்.

இதற்கு நீதிபதிகள் வழக்கை முறையாக தாக்கல் செய்தால் நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டார்.



# நாகர்கோவில் விளையாட்டு அரங்க மகளிர் விடுதியில் கலெக்டர் திடீர் ஆய்வு

நாகர்கோவில், ஜூலை. 14

நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்க வளாகத்தில் மகளிர் விளையாட்டு விடுதி செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மதுரை, சென்னை, சேலம் மற்றும் நமது மாவட்டத்திற்குட்பட்ட அருகாமையில் உள்ள மாவட்டத்தை சேர்ந்த 60 மாணவர்கள் தங்கி, பயிற்சி பெற்று வருகிறார்கள். அதன்ஒருபகுதியாக மகளிர் விளையாட்டு வீராங்கனைகள் விடுதியை கலெக்டர் பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

விளையாட்டு வீராங்கனைகளுக்கு உடல் வலிமையும், ஆரோக்கியமும் மிக முக்கியம். எனவே, அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மிகவும் ஊட்டச்சத்து நிறைந்ததாகவும், சுத்தமான முறையிலும் சமைக்கப்பட வேண்டும் என விடுதி காப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. வீராங்கனைகளின் பயிற்சிக்குத் தேவையான அனைத்து கூடுதல் வசதிகளும், தட்டச்சு மற்றும் கணினி பயிற்சி மையமும் மாவட்ட நிர்வாகம் மற்றும் விளையாட்டு துறையின் வாயிலாக உடனுக்குடன் செய்து தரப்படும். விடுதியில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என கேட்டறியப்பட்டது. மேலும் விளையாட்டில் மட்டுமல்லாமல் படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். படித்தால் மட்டும் தான் விளையாட்டு துறையின் இடஒதுக்கீட்டில் நீங்கள் சாதிக்க முடியும். ஒலிம்பிக், காமன்வெல்த், ஆசிய போட்டிகள் மற்றும் மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வீராங்கனைகளுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் வினு, விடுதி காப்பாளர்கள், பயிற்றுநர்கள், துறை அலுவலர்கள், மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகர்கோவில், ஜூலை, 14

நாகர்கோவிலில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று 13.ம் தேதி நடைபெற்றது. கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 490 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்டஆட்சித்தலைவர்துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 16 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, உதவி ஆட்சியர் பயிற்சி மோனிகா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தருமபுரியில்

# சட்ட தூண்கள் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



தருமபுரி ஜூலை 14

தருமபுரியில் சட்ட தூண்கள் இயக்கத்தின் சார்பில் அனைத்து வகை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைமை அலுவலகத்தில் சட்ட தூண்கள் இயக்கத்தின் நிறுவனர் குணசேகரன் தலைமையில் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் மாநில செயலாளர் மணி, அறங்காவலர் முத்து மற்றும் குமரவேல், மாநில துணைச்செயலாளர்எஸ்.பி.நாகராஜ்,மாநிலஇளைஞரணி செயலாளர் கணேஷ், மாநில தொழில் நுட்ப செயலாளர் கௌதம், மாவட்ட தலைவர் பி. கே. சிவா, மாவட்ட செயலாளர் முனிராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நிலவும் அடிப்படை பிரச்சனைகள், மக்களின் அன்றாட தேவைகள், கிராமப்புற வளர்ச்சி, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பொதுநல திட்டங்களை திறன் பட செயல்படுத்துவது தொடர்பாக விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கிராம மக்களின் கோரிக்கைகளை நேரடியாக கேட்டு அறிந்து அவற்றை சம்பந்தப்பட்ட அரசு துறைகளில் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவதோடு மக்கள் நலன் சார்ந்த பணிகளில் சட்ட துண்கள் இயக்கம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படும் என கூட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டது.

## கன்னியாகுமரி கடலில்

# நாட்டுப் படகில் இருந்து விழுந்த மீனவர் தேடும் பணி தீவிரம்



கன்னியாகுமரி, ஜூலை.14

கன்னியாகுமரியை அடுத்த சின்னமுட்டம் மீன்பிடிதுறைமுகத்தில்இருந்துதினந்தோறும் ஏராளமான நாட்டுப் படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்றனர். இந்தநிலையில் சின்னமுட்டத்தை சேர்ந்த ஆரோக்கியம் என்பவருக்கு சொந்தமான நாட்டுப் படகில் கோவளத்தை சேர்ந்த 5 மீனவர்கள் நேற்று அதிகாலை 5 மணிக்கு கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். சிலுவை நகர் கடல் பகுதியில் இருந்து சுமார் 2 கடல் மைல் தூரத்தில் மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது கடலில் எழுந்த ராட்சத அலை நாட்டுப் படகில் மோதி நிலைகுலைந்தது. அதில்நாட்டுப்படகில் இருந்த கோவளத்தை சேர்ந்த ராஜா (36)என்பவர்படகில்இருந்துதவறிகடலுக்குள்விழுந்தார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த மற்ற மீனவர்கள் ராஜாவை காப் பாற்ற முயன்றனர். ஆனால் கடல் சீற்றம் மற்றும் அலை காரணமாக அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. பின்னர் இதுகுறித்து அவர்கள் கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் கடலோர பாதுகாப்பு குழும இன்ஸ்பெக்டர் சாந்தி தலைமையிலான போலீ சார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். கடலில் விழுந்து மாயமான ராஜாவை உள்ளூர் மீனவர்களுடன் தேடி வருகின்றனர். இதற்கிடையே நாட்டுப் படகில் தத்தளித்த மற்ற 4 மீனவர்களும் பாதுகாப்பாக கரைக்கு அழைத்து வரப்பட்டனர். நாட்டுப்படகில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களில் ஒருவர் கடலில் விழுந்து மாயமான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நாகர்கோவில் குட்கா வழக்கு

# கைதான வாலிபர் சிறையில் திடீர் சாவு: உறவினர்கள் போராட்டம்



நாகர்கோவில், ஜூலை.14

குமரி மாவட்டம் தென்தாமரை குளம் அருகே உள்ள ஈத்தங்காடு நாராயணன்புதூர் பகுதியை சேர்ந்தவர் சசிதரன் மகன சபரிவர்மன் (34). இவர் அந்த பகுதியில் கடை நடத்தி வந்தார். கடந்த 9ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் இவரது கடையில் தென்தாமரைகுளம்இன்ஸ்பெக்டர் பிரைட் பிளசிங் தலைமையிலான போலீசார் சோதனை நடத்தினர். அப்போது கடையிலிருந்து அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களைபறிமுதல்செய்தனர். பின்னர் சபரி வர்மன் கைது செய்து அவர் நாகர்கோவில் சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த நான்கு நாட்களாக அவர் விசாரணை கைதி என்ற நிலையில் இருந்துள்ளார்.

நேற்று அதிகாலையில் சவரி வர்மன் மயக்க நிலையில் கிடந்ததாக கூறப்படுகிறது. உடனே அவரை போலீசார் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றுள்ளனர். அங்கு பரிசோதனையில் சவரி வர்மன் உயிரிழந்தது தெரிய வந்தது. இந்த தகவல் அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். சபரி வர்மனை போலீசார் சரமாரியாக தாக்கி உள்ளதாகவும், இதனால் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவசரஅவசரமாக சிறையில் அடைத்துள்ளதாகவும், சபரி வர்மனுக்கு உடல்நிலை பாதிப்பு கிடையாது என உறவினர்கள் புகார் கூறியுள்ளனர்.

இதையடுத்து உறவினர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். உடனடியாக சம்பவ இடத்திற்கு மாவட்ட எஸ்பி ஸ்டாலின் வருகை தந்தார். தொடர்ந்து இளைஞர்களும் பெண்களும் போராட்டத்தில் பங்கு பெற்றனர். சம்பவ இடத்திற்கு வந்த எஸ் பி ஸ்டாலின் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும் சபரி வர்மனின் உடலில் காயம் இருப்பதாக புகார் கூறப்பட்டது. இது குறித்து மாவட்ட எஸ்பி பேச்சுவார்த்தை நடத்தி, பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் . யார் தவறு செய்தாலும் பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். இதை அடுத்து

## ஈரோட்டில்

# டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி பொதுமக்கள் சாலை மறியல்



ஈரோடு, ஜூலை 14 :

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நாராயணவலசுபகுதியில்செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபானக் கடை (கடை எண்: 3584) மற்றும் அதனுடன் இணைந்துள்ள மதுபானக் கூடத்தை உடனடியாக அகற்றக் கோரி அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் பெண்கள், முதியவர்கள்,இளைஞர்கள்உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, டாஸ்மாக் கடையால் அப்பகுதியில் தொடர்ந்து சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதாகவும், பெண்கள் மற்றும் மாணவிகள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை ஏ ற் ப ட் டு ள் ள த ா க வு ம் குற்றம்சாட்டினர்.

மேலும், மதுபோதையில் உள்ளவர்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவது, பள்ளி மாணவர்கள் மற்றும் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வது, சாலை விபத்துகள் மற்றும் அடிக்கடி தகராறுகள் நடைபெறுவது போன்ற பிரச்சினைகள்நாளுக்குநாள்அதிகரித்து வருவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள், பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து, டாஸ்மாக் கடையை நிரந்தரமாக அகற்றக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்.

அந்த மனுவில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21 மற்றும் 47வது கட்டுரைகள், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளை மேற்கோள் காட்டி, பொதுமக்களின் உயிர் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு டாஸ்மாக்கடையைஅகற்றவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.



## சேலத்தில் நாய்கள் தொல்லையால் அவதி

# அடைந்த பொது மக்கள், நடவ டிக்கை எடுக்க கோரி ஜங்ஷன் மெயின் ரோட்டில் மறியல்

சேலம், ஜூலை 14

சேலம் மாநகராட்சி 2வது வார்டு, ஜாகிர் அம் மாபாளையம் ராஜகாளியம் மன் தெரு பகுதியைச் சேர்ந்த ஒருவர் 60க்கும் மேற்பட்ட நாய்களை பராம ரித்து வளர்த்து வருகிறார். அந்த நாய் கள் அப்பகுதியில் செல்லும் குழந்தை கள், பெண்களை உள்ளிட்டோரை அடிக்கடி பயமுறுத்தி வருவதாக குற் றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், வாக னங்க ளில் செல்வோரை கவ்விப்பிடிப் பது போல துரத்திச்செல்வதால் பலர் அடிக்கடி விபத்துக்க ளில் சிக்கி வருவ தாகவும் கூறப்படுகிறது. இதுகு றித்து அப்பகுதி மக்கள் மாநகராட்சி அலு வல கத்தில் பல முறை புகார் தெரிவித் தும் நடவ டிக்கை எடுக்கவில்லை. அண்மையில் நாய்கள் சிலரை கடித் துள்ளது. இதனால் ஆத்திரத்தில் இருந்த ராஜகாளியம் மன் கோவில் 1வது, 2வது தெருவை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், நேற்று 5 ரோட்டில் இருந்து ஜங்சன் செல்லும் பிரதானசாலை முன் அமர்ந்து நாய் வளர்க்கும் நபரின் நடவடிக்கையை கண்டித்து, மறியலில் ஈடுபட் டனர். தகவல் அறிந்த சூரமங்கலம் போலீசார் மற்றும் மாநகராட்சி சுகாதார அதிகாரி கள் சம்பவ இடத்துக்கு சென்று பொது மக்களு டன் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவ டிக்கை எடுப்பதாக உறுதி யளித்தனர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்ற னர். மறியல் காரணமாக அப்பகுதியில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



## சேலத்தில்

# புதிய உதயம் மிஸ்டர் பிக்கி உணவகம்

சேலம், ஜூலை 14

சேலம் மூன்று ரோடு பகுதி ஆரோக்கியா மருத்துவமனை அருகில் மிஸ்டர் பிக்கி பன்றி இறைச்சி உணவகம் பிரம்மாண்ட முறையில் திறக்கப்பட்டது . இங்கு "ட்ரோக்" (TROCK) வகையைச் சேர்ந்த பன்றி இறைச்சி சுத்தமான முறையிலும், சுகாதாரமான முறையிலும், எந்தவித கெமிக்கலும் கலப்படமும் இல்லாத எண்ணையாலும்,கிராமிய முறையில் சொந்தமாக தயாரிக்கப்பட்ட மசாலாக்களை கொண்டு பாரம்பரியமிக்க முறையில் பன்றி இறைச்சி(போர்க்) உணவுகள் தயாரிக்கப்படுகிறது. இங்கு பத்து வகையான தரமான பன்றி இறைச்சி (போர்க்) உணவுகள் விதவிதமாக தயாரிக்கப்படுகிறது. 100பேர்அமர்ந்து சாப்பிடும் வகையில் அமைந்துள்ளது கார் பார்க்கிங் வசதி உள்ளது.

இந்த உணவகம் சுரேஷ்குமார் தலைமையில், தியாகராஜன் சுந்தரலிங்கம் மற்றும் மேலாளர் தாதை மோகன்ராஜ் முன்னிலையில் திறக்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக திமுக மாவட்ட அமைப்பாளர் தேவிபாலன் கலந்து கொண்டார். மேலும் இந்த நிறுவனத்தின் சுமதி, தனலட்சுமி, மற்றும் உணவக பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி டான் போஸ்கோ கல்லூரியில்

# "ஜனனம்" போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




தருமபுரி ஜூலை 14

தருமபுரி அடுத்த சோகத்தூரில் உள்ள டான் போஸ்கோ கல்லூரியும், ஈரணி லம் அமைப்பும் இணைந்து "ஜனனம் போதைப்பொருள் அடிமைத்தனமும் சமூகத்தில் அதன் தீமைகளும்" என்ற தலைப்பில் மாபெரும் விழிப்புணர்வு நிகழ்சி கல்லூரி வளாகத்தில் நடை பெற்றது. இந்த நிகழ்சிக்கு கல்லூரிச் செயலாளரும் இல்லத்தந்தையுமான இராபர்ட் ரமேஷ் பாபு தலைமை தாங் கினார். நிகழ்வை அவர் தொடங்கி வைத்து உரையாற்றினார். கல்லூரித் துணை செயலாளர் சிபி மேத்யூ, கல்லூரி முதல்வர் ஆனந்த், துணை முதல்வர் அருட்தந்தை தாமஸ், பொருளாளர் அமலவாணன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். "போதைக்கு இல்லை என்று சொல் லு ங் க ள் " இந்நிகழ்சியின் சிறப்பு விருந்தினராக தருமபுரி மாவட்ட காவல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்கள் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பா ளர் ஸ்ரீதரன் கலந்து கொண்டார். அவர் பேசும்போது, இளைஞர்கள் மத் தியில் போதைப்பழக்கம் அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்தார். போதைப்பொருள் ஒரு மனிதனின் கல் வியையும், குடும்பத்தையும், எதிர்கா லத்தையும் சீரழித்துவிடும் என பல் வேறு விழிப்புணர்வை எடுத்துரைத்தார். "போதைக்குஇல்லை என்று சொல்லுங்கள், வாழ்கைக்கு ஆம் என்று சொல்லுங்கள்" என மாண வர்களுக்கு அறிவுரை வழங்கினார். நிகழ்சியில் தருமபுரி தாசில்தார் சுகு மார் மற்றும் ஈரணிலம் நிறுவனர் தமிழ ரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். நிகழ் சியில் ஏராளமான மாணவ, மாணவி கள் கலந்து கொண்டு போதைப்பொ ருள் பயன்படுத்த மாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதைத்தொடர்ந்து மாணவர்கள் போதை பொருள் விழிப்புணர்வு வண்ண ஓவிய கண்காட்சியை பார்வை யிட்டனர்.



தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் குமாரம்பட்டி கிராமம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள குமாரம்பட்டி அணைக்கட்டு மற்றும் அணைக்கட்டு நீர்ப் பிடிப்பு பகுதிகளை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது நீர்வளத்துறை உதவி பொறியாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சின்னம்மை நோயால் மூளை பாதிப்பு

# 53 வயது பெண்ணுக்கு டாக்டர் மேத்தா மருத்துவமனையில் வெற்றிகர சிகிச்சை



சென்னை, ஜூலை 14

சின்னம்மை நோயால் பாதிக்கப்பட்ட 'வெரி செல்லா என்செபாலிடிஸ்' எனப்படும் உயிருக்கு ஆபத் தான மூளை நோயால் பாதிக்கப்பட்ட சென்னை யைச் சேர்ந்த 53 வயது பெண்ணுக்கு டாக்டர் மேத்தா மருத்துவமனை மருத்துவர்கள் வெற்றிகர மாக சிகிச்சை அளித்து காப் பாற்றியுள்ளனர்.

மூத்த நரம்பியல் நிபுணர் டாக்டர் ஜெரட் லிவிங்ஸ் டன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் அவ ரைப் பரிசோதித்த பின் சின் னம்மை வைரஸ் அவரது மூளை மற்றும் நரம்பு மண் டலத்தைத் தாக்கி, மூளை யில் கடுமையான வீக் கத்தை ஏற்படுத்தியிரு ப்பதை அவர்கள் கண்டறிந் தனர். அவருக்கு உடனடி யாக சிகிச்சை அளிக்காவிட் டால், மூளை பாதிப்பு அதிகமாகி, ரத்தக்கசிவு மற் றும் மூளையில் ஆபத்தான அளவில் நீர் கோர்த்து உயிரி ழக்கும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் அவரது குடும்பத்தினரிடம் தெரி வித்தனர்.

பின்பு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அடுத்த சில நாட்களில் அவ ரது உடல்நிலை மோசம டைந்தது. ரத்தக்கசிவு அதிக மாகி, மூளையில் அதிகப்படியான நீர் சேர்ந்த தால் மூளையின் அழுத்தம் அபாயகரமான அளவிற்கு உயர்ந்தது. இதனால் அவ ரது சுயநினைவும் குறையத் தொடங்கியது.

அவரது உயிரைக் காப் பாற்ற மருத்துவக் குழுவி னர் அவருக்கு மூளையில் சிறு துளையிட்டு குழாய் மூலம் தேங்கியிருந்த அதி கப்படியான நீரை வெளி யேற்றி அழுத்தத்தைக் கு றை த் த ன ர் . ரத்தக்கட்டியைக்கரைத்து, மேலும் நரம்பு பாதிப்பு ஏற்படாமல் தடுக்க ஹெப் பரின் என்னும் மருந்து ஊசி மூலம் செலுத்தப் பட்டது.

இந்த அவசர சிகிச்சைகளுக்குப் பிறகு, நோயாளியின் உடல் நிலை படிப்படியாக முன் னேறியது.

வென்டிலேட்டர் உதவி இல்லாமல் அவரால் இயற்கையாகவே சுவா சிக்க முடிந்தது. அதைத் தொடர்ந்து அவரது உடல் நிலையில் நல்ல முன் னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, 40 நாட்கள் ம ரு த் து வ ம னை சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் வீடு தி ரு ம் பி ன ா ர் . இதுகுறித்து இம்மருத்து வமனையின் மூத்த நரம்பி யல் நிபுணர் டாக்டர் ஜெரட் லிவிங்ஸ்டன் கூறு கையில், "பொதுவாக சின் னம்மை ஒரு சாதாரண வைரஸ் காய்ச்சலாக கரு தப்பட்டாலும், சில நேரங் களில், குறிப்பாக பெரிய வர்களுக்கு இது கடுமையான நரம்பியல் பாதிப்புகளை ஏற்படுத் தும். இந்த நோயாளியின் நிலை சின்னம்மையால் ஏற்பட்ட மிக அபூர்வ மான மற்றும் வேகமாகப் பரவக்கூடிய மூளை பாதிப்பாகும். சரியான நேரத்தில் நோயைக் கண் டறிதல், தொடர்ந்து கண் காணித்தல், நவீன ஸ்கேன் வசதிகள் மற்றும் மருத்துவர் களின் கூட்டு முயற்சியே இந்த ஆபத்தான நிலையிலி ருந்து நோயாளியைக் காப் பாற்ற உதவியது." என்றார்.


வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், கிருஷ்ணகிரி.

மே.எ.அ.தி.மு. 539/2026

சொக்கலிங்கம் க/பெ கர்ணல்லு (எ) சின்னசாமி, சின்னகுன்னத்தூர் கிராமம், உப்பாரப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், : 9962167482

மனுதாரர்

//எதிராக//

உயர்திரு. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி அறிவிப்பு

எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான், எனது அப்பா லேட். கர்ணல்லு (எ) சின்னசாமி த/பெ குப்பா கவுண்டர் என்பவர் கடந்த 04.06.2003ம் தேதியில் சின்னஷகன்னத்தூர் (உப்பாரப்பட்டி) கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி எனது. அப்பா இறப்பு பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்,
சொக்கலிங்கம் க/பெ கர்ணல்லு (எ) சின்னசாமி,
சின்னகுன்னத்தூர் கிராமம்,
உப்பாரப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்,
செல்: 9962167482



# பெருந்துறையில் பொது மக்களிடம் மனுக்களை பெற்ற அமைச்சர்கள்

ஈரோடு ஜூலை 14

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனுக்கள் பெறும் முகாம் நடைபெற்றது. இதில் ஏராளமான பேர் கலந்து கொண்டு வரிசையில் நின்று மனுக்களை கொடுத்தனர். இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கைத்தறி, துணிநூல் காதித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றனர்.

இதன் பிறகு அமைச்சர்கள் கூறும் போது பொது மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து விரைந்து தீர்வு காண முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டு உள்ளார். அதன் படி பொது மக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்கள் அளிக்கும் ஒவ்வொரு மனுவும் ஆன்லைன் முறையில் பதிவு செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு அனுப்பி விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பலமுறை செல்ல வேண்டிய நிலையை மாற்றி, அரசு நேரடியாக மக்களை அணுகி அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் நீண்டகாலமாக நிலவி வரும் சிப்காட் தொடர்பான பிரச்சினைகளுக்கு பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், குடிநீர் வசதி, சமூக நலத் திட்டங்கள். அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு விரைவாக தீர்வு காணப்படும் என்று கூறினர். இந்த முகாமில் 1000க்கும் மேற்பட்ட மனுக்கள் வரப்பெற்றன. இந்த மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர்கள் உத்தரவிட்டனர். முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார். ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா சங்கர், வருவாய் வட்டாட்சியர் செல்வகுமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோபியில் 25 ந் தேதி வேலை வாய்ப்பு முகாம்

## முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் 2 அமைச்சர்கள் பங்கேற்பு



ஈரோடு ஜூலை 14

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வருகிற 25 ந் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது . இதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுக்கான கூட்டம் பெருந்துறையில் நடந்தது. இதில் அமைச்சர்கள் கே ஏ செங்கோட்டையன் மற்றும் விஜய் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். இந்த கூட்டத்தில் மாவட்ட ஆட்சிதலைவர் கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண்ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாபெரும் முற்றுகை போராட்டம்




கோவை ஜூலை:14

கோவை கலெக்டர் அலுவலகம் முன்பு கோவை மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்காக வட்டி இல்லா பயிர் கடன்களை பெற்று விவசாயம் செய்து வந்தோம். விவசாயத்தையே முழுமையாக நம்பி விவசாயிகள் கு

றிப்பாக பருவநிலை மாற்றம்,ஆட்கள் பற்றாக்குறை,கூலி உயர்வு,ரசாயன உர விலைகள் பல மடங்கு ஏற்றம்,வனவிலங்கு தாக்குதல் தண்ணீர் பற்றாக்குறை,டீசல் பெட்ரோல் விலை ஏற்றம் பண்ணை இயந்திரங்கள் விலை உயர்வு,இடுபொருட்கள் போன்ற பல்வேறு சூழ்நிலைக்கு இடையில் விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்து வருகிறோம்.

மேலும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு விவசாயிகள் பெற்ற பயிர் கடன்களை எந்தவித நிபந்தனையுமின்றி மகாராஷ்ரா அரசு முழுமையாக தள்ளுபடி செய்துள்ளது.

மேலும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர் கடன் தொகையினை தமிழக அரசு நிதி சுமையாக கருதாமல் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை

கருத்தில் கொண்டு ண்டு முழுமையாக தள்ளுபடி செய்ய முன்வர வேண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து

இடைக்கால நிதி நிலை பட்ஜெட் கூட்டத்தொடரில் முழுமையான நிபந்தனையற்ற பயிர் கடன்கள் தள்ளுபடி அறிவிப்பு வரும் வரை விவசாயிகளிடமிருந்து எந்த விதமான கடன்களையும் வசூலிக்க கூட்டுறவு சங்க அதிகாரிகள் நிர்பந்திக்க கூடாது என்றும் தமிழ்நாடு முதல்வர் விவசாயிகளின் நலன் கருதியும் தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ள தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றிட இந்த போராட்டத்தின் வாயிலாக வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில்

# 25 ந் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

ஈரோடு, ஜூலை 14

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வருகிற 25 ந் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது.

இதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுக்கான கூட்டம் பெருந்துறையில் நடந்தது. இதில் அமைச்சர்கள் கே ஏ செங்கோட்டையன் மற்றும் விஜய் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். இந்த கூட்டத்தில் மாவட்ட ஆட்சிதலைவர் கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண்ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## த.வெ.க. சார்பில்

# வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள 25 பயனாளிகளுக்கு உணவுப் பொருட்கள்

### பல்சமய நட்புறவு கழகம் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



திருப்பூர், ஜூலை 14

திருப்பூர் தெற்கு பகுதியில் சிடிசி பஸ் டிப்போ பின்புறம் தனியார் பார்ட்டி ஹாலில் தமிழக வெற்றிக் கழகத்தின் சேவை குழு துவக்க விழா நடைபெற்றது. திருப்பூர்தெற்குமாநகரமாவட்டதுணைச்செயலாளர் குத்புதீன்தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பல்சமய நட்புறவு கழகத்தின் தலைவர் ஷாஜகான் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்ட தலைமைக் கழக பேச்சாளர் கருப்பசாமி பாண்டி மாவட்டத் துணைச் செயலாளர் ஹர்ஷத் அலி வடக்கு நகர இளைஞர் செயலாளர் ரபீக் மற்றும் சிறுநகரைச் சார்ந்த அசரப் அலி தவெக, நிர்வாகிகள் ஜியாவுல்லா மற்றும் சிடிசி பகுதி செயலாளர் உசேன் விஜயாபுரம் பகுதி செயலாளர் ராஜேஷ் பாண்டி வார்டு செயலாளர் நல்லூர்,காதர் மற்றும் நிர்வாகிகள் பல்வேறு அறக்கட்டளையைச் சார்ந்தவர்கள்கலந்து கொண்டார்கள் இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மூன்று சக்கர மிதி வண்டியும் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டது.

# சேலம் மாவட்ட கலெக்டர் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், ஜூலை 14

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அந்த மனுக்கள் மீண்டும் மீண்டும் வராத வகையில் மனுக்கள் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல், சாதி சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகளை கேட்டு 434 மனுக்கள் பெறப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் எந்தவித சிரமமும் இல்லாமல் மனுக்களை வழங்கும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தரைதளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம் நடத்தப்பட்டு அதில் 30 மனுக்கள் பெறப்பட்டது.அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 4 மாற்று திறனாளிகளுக்கு ரூபாய் 3000 மதிப்பில் காதொலிக்கருவிகளும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ ,40,000/= மதிப்பீட்டில் பேட்டரியில் இயங்கும் சக்கர நாற்காலிகள் என மொத்தம் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் வழங்கினார்.

## கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பாக

# நரம்பியல் தீவிர சிகிச்சை குறித்த மருத்துவ கருத்தரங்கம்




கோவை ஜூலை:14

கோவை நீலாம்பூரில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் ராயல் கேர் மருத்துவமனை சார்பில் நரம்பியல் தீவிர சிகிச்சை தொடர்பான மருத்துவ கருத்தரங்கம் நடைபெற்றது.3 நாட்கள் நடைபெற்ற இதில் முன்னதாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான பயிற்சி பட்டறை முகாம் நடைபெற்றது.

தொடர்ந்து இறுதி நாளில் நடைபெற்ற கருத்தரங்கில் பக்கவாதம்,மூளையில் ரத்தக்கசிவு,தலையில் ஏற்பட்ட காயங்கள்,மூளைச்சாவு மற்றும் உறுப்பு தானம்,வலிப்பு,மூளை மற்றும் நரம்பு தொற்றுகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நிபுணர் மருத்துவர்கள் உரையாற்றி,மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள புதிய சிகிச்சை முறைகள் குறித்து விளக்கமளித்தனர்.

இதில் பல்வேறு பகுதிகளில் இருந்து மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் என 300 கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.முன்னதாக இதன் துவக்க விழா ராயல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரும் தலைவரும் ஆன மருத்துவர் மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக ராம் ராஜ கோபாலன் கலந்து கொண்டு கருத்தரங்கை துவக்கி வைத்தார்.இதில் மருத்துவர்கள் மேத்யூ ஜோசப்,சிவக்குமார்,பரந்தாமன்,மருத்துவமனையின் சி.ஓ.ஓ.மணி செந்தில் குமார்,பொது மேலாளர் வெங்கடேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மருத்துமனை தலைவர் மாதேஸ்வரன் பேசுகையில்,மருத்துவத் துறையில் தொழில்நுட்பங்கள் தொடர்ந்து மாறி வரும் சூழலில்,இதுபோன்ற கருத்தரங்குகள் மருத்துவர்களின் அறிவையும் திறமையையும் மேம்படுத்த பெரிதும் உதவுகின்றன.

மேலும்,மருத்துவத் துறை சார்ந்த இத்தகைய நிகழ்வுகள் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்குவதற்கும்,உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றனஎன்றார்.



# திமுக அரசுக்கு கொடுத்த நெருக்கடிகளை தவெக அரசுக்கும் கொடுப்போம்

## தென்காசியில் அரசு ஊழியர்கள் சங்க கூட்டமைப்பினர் எச்சரிக்கை

தென்காசி, ஜூலை.14

தென்காசியில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்ட பொதுக்குழு கூட்டம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய இணைப்பு சங்கங்களில் நிர்வாகிகள் கூட்டம், ஏடிஏஃப் அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில களப் பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் என முப்பெரும் விழா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டம் மாவட்ட தலைவர் சந்திரதாஸ் தலைமையில், மாநில தலைவர் மகேந்திர குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் போது மாநில தலைவர் மகேந்திரகுமார் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் தெரிவித்த த ா வ து ஏற்கனவே நாங்கள் அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளோம். அவை நிலுவையில் இருக்கின்றன அவற்றை நிறைவேற்றி தர வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். புதிய அரசுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடாது என்பதற்காக ஆறு மாதங்கள் நாங்கள் எதையும் வலியுறுத்தப் போவதில்லை. இருப்பினும் பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற ஒரே ஒரு கோரிக்கையை அரசு முதன்மை கவனத்தில் கொண்டு நிறைவேற்றித் தர வேண்டும். மேலும் சத்துணவு பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், டேங்க் ஆபரேட்டர்கள் உள்ளிட்ட பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். இதனை நிறைவேற்ற தவறினால் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபடுவோம். அதிலும் எங்கள் கோரிக்கைநிறைவேற்றப்படாவிட்டால் பழைய அரசுக்கு கொடுத்த நெருக்கடிகளை தமிழக வெற்றிக் கழக அரசுக்கும் நாங்கள் கொடுப்போம். எங்களது கோரிக்கைகளை அரசும் கவனத்திற்கு கொண்டு செல்ல ஐஏஎஸ் உட்பட உயர் அதிகாரிகள் மறுக்கிறார்கள். அவர்களை அரசு கண்காணிக்க வேண்டும். எங்களைப் போன்ற சங்கங்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றி தர வேண்டும் என் ற ா ர் . இந்த சந்திப்பின்போது அரசு ஊழியர்கள் கூட்டமைப்பின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திருநெல்வேலியில் நடைபெற்ற 9வது மாநில அளவிலான படைப்புத்திறன் போட்டியில் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் முதலிடம் பெற்றதற்கான சான்றிதழை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.